www.tamilarangam.net

# புதிய பாதை

அன்பளிப்பு
தமிழீழத்தில் 1/50
தமிழகத்தில் 75 காசு

காதம் 2 | மே 1984 | சுவடு 17

## ★ தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்! ★

1984ம் ஆண்டு மே தினம் இலங்கையில் தொழிலாளர்கள் போராட்ட வரலாற்றில் மகத்தான வெற்றிகளை வழங்கப்போகிறது என எதிர்பார்த்தவர்கள் ஏமாந்து நின்றார்கள். ஏப்ரல் 2ம் திகதி தோட்டத் தொழிலாளர்களால் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்கள் சிங்கள இனவாத அரசிடமிருந்து ஜனநாயக உரிமைகளையும், தொழிற்சங்க உரிமைகளையும் வென்றெடுப்பது மாத்திரமன்றி சிங்கள இனவாதத்தின் கொடூரத்திற்கு பதிலடி கொடுக்க ஆயத்தமாய் உள்ளார்கள் என்பதையும் நிலைநாட்டும் முகமாகவே இவ்வேலை நிறுத்தப் போராட்டம் வெடித்துக் கிளம்பியது. தோட்ட தொழிலாளர் பிரச்சனை இந் நாட்டின் சிறுபான்மை பிரச்சினையின் தீர்விலிருந்து மாறுபட்டதொன்றல்ல. சிங்கள இனவாத அரசின் கொடூரத்தில் இருந்து விடுதலை பெறாமல் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் ஏனைய சலுகைகள் யாவும் வெறும் தூசுதான். இத்தகைய பின்னணியில் உருவானதே இவ் வேலை நிறுத்தம்.

காமினி திசாநாயகாவின் அரசு சார்பான தொழிற்சங்கம் தவிர்ந்த ஏனைய தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுமார் ஆறு இலட்சம் தொழிலாளர்கள் இவ் வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள். காமினி திசாநாயகாவின் சில கோரிக்கைகள் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பின்பும் தோட்ட தொழிலாளர்கள் விடாப்பிடியாக இப் போராட்டத்தை ஆரம்பித்தது, இது வெறும் கூலி உயர்வுக் கோரிக்கை மாத்திரம் சார்ந்த விடயம் அல்ல என்பதையே காட்டுகின்றது.

1980 இல் நடைபெற்ற அரசாங்க ஊழியரின் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை குரூரமாக ஒடுக்கிய அரசினால் தோட்ட தொழிலாளர்களின் இவ்வெழுச்சியை வெறுமனே தூக்கி எறிய முடியவில்லை. சிங்கள இனவாதத்தின் இன அழிப்புக்கு எதிராக வடக்கு கிழக்கில் நடைபெறும் போராட்டங்களுக்கு இணையாகவே மலைநாட்டில் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் ஒரு வாரத்தின் பின் 2 ரூபா சம்பள உயர்வுடன் ஆர்ப்பாட்டமாக வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கங்கள் யாவும் முடக்கப்பட்டு அடங்கிப்போயின.

இதோ! பூகம்பம் வெடிக்கப் போகின்றது என்று எதிர் பார்த்தவர்களுக்கு, வெறும் புஸ்வாணம்தான் இது என்றதும், ப்பூ! இவ்வளவுதானா என்று தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். அனைத்துக்கும் காரணம் வழமையான தொழிற்சங்கத் தலைமைகளின் காட்டிக் கொடுப்புக்கள்தான். முதலாளித்துவத் தலைமைகள் மாத்திரமன்றி, இடதுசாரித் தலைமைகளும் இந்த போராட்டத்தை இடை நடுவில் நிறுத்தி தொழிலாளர் காலை வாரிவிடுவதில் ஐக்கியப்பட்டிருக்கின்றன.

ஆண்டாண்டுகாலம் சுயநலத் தலைமைகளால் இழுத்தடிக்கப்படும் மலையக மக்கள் புதிய தலைமைகளை உருவாக்கி தேசிய இனப் பிரச்சனைகளோடு தம் போராட்டங்களை இணைத்து முன்னேற வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றோம். சிங்கள இனவாதத்தின் கோரப் பிடியில் இருந்து தம்மை விடுவிக்காமல் தம் பிரச்சனைகள் தீரப் போவதில்லை என்பதில் மலையக மக்கள் இம் மே தினத்தில் திடசங்கற்பம் பூணவேண்டுகிறோம்.

## மே தினம்!

இன்று!

சமதர்மத் தமிழீழத்தை அமைக்க வேண்டும் என்ற இதய வேட்கையில் ஆயிரமாயிரமாய் அணி திரண்டு போராடும் எம் தோழர்கள் அனைவரும் மெய் சிலிர்க்க பூரிப்புடன் வீறுநடைபோடும் எழுச்சி நாள்.

முதலாளித்துவத்தின் சகல அடக்கு முறைகளையும் உடைத்தெறிய உடம்பின் இறுதித் துளி இரத்தம் இருக்கும் வரை போராடியே தீருவோம் என்று சிக்காக்கோ நகர பாட்டாளி வர்க்கம் அன்று உலகுக்கு பறைசாற்றிய உன்னதமான நாள்.

கடந்த காலங்களில் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் மே தின எழுச்சிக் கூட்டங்களைச் சிறப்பாக நடத்தி, தமிழீழப் போராட்டத்தை உழைக்கும் மக்களுக்கு விமோசனம் காணும் போராட்ட பாதையாக மாற்றியமைப்பதில் வெற்றி கண்டு பூரிப்படைந்தோம்.

இன்று சிங்கள இனவாதத்தின் அடக்குமுறை பகிரங்கமாக மே தின விழாக்களை நடத்த முடியாமல் எம்மை தடுத்து எமது முக்கிய போராளிகள் பலரை சிறையில் கொன்று குவித்து, அவர்கள் இதய நாதத்தை வெளியே கேட்க முடியாமல் முடக்கிவிட்டது. நூற்றுக்கணக்கான தோழர்களைச் சிறைப்பிடித்து, செய்யும் சித்திரவதைகள்

(7ஆம் பக்கம் பார்க்க)

**அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

1983 ஜூலை மாதத்தில் சிறிலங்கா இராணுவத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழர்களுக்கு எதிரான வன்முறையினைத் தொடர்ந்து ஏற்பட்ட உலக நாடுகளின் அனுதாபம், இந்தியாவின் தலையீடு என்பன தமிழ் மக்களுக்கு விமோசனம் தரும் விடயங்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன, வட்டமேசை மாநாடு பயன்தரும் முடிவுகளைக் கொண்டுவரும் என எதிர்பார்த்தவர்கள் ஏமாந்து நின்றார்கள். வட்டமேசை மாநாட்டின் நீண்டகால ஒத்திவைப்புகளோ. அது பிசுபிசுத்து விட்டதென்பதைத் தெளிவாகக் காட்டி நிற்கிறது. 1983 ஜூலை கலவரத்தின்போது எமக்காகக் கண்ணீர் விட்ட உலக நாடுகள் இன்று வேறு எந்த நாட்டுப் பிரச்சனைக்காகப் புதிதாகக் கண்ணீர் விடலாம் என்று தேடத் தொடங்கி விட்டார்கள். தமிழர்கட்கு எதிரான இனஅழிப்பு இப்பொழுது அவர்களுக்குப் பழங்கதையாகி விட்டது.

இந்த அசமந்தபோக்கை மாற்றியமைத்து, மீண்டும் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கில்தானோ என்னவோ வழமைபோல யாழ் குடா நாட்டுக்குள் மீண்டும் இராணுவத்துக்கு எதிரான சிறு தாக்குதல் ஒன்று நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் பின்விளைவுகளோ மிகப்பயங்கரமாக நடந்து முடிந்திருக்கிறது.

இம்முறை யாழ்ப்பாணத்துக்குள் வரலாறு காணாத இன அழிப்பை இராணுவம் காட்டுமிராண்டித்தனமாகக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. அப்பாவிப் பொது மக்கள் காரணமேதுமின்றி கொன்றொழிக்கப்பட்டிருக்கிறார்கள். இறந்தவர் எண்ணிக்கை நூற்றுக்கு மேல். காயப்பட்டவர்கள் 300க்கும் அதிகம். வெளியுலகின் அபிப்பிராயத்தை தடுக்கவேண்டுமென்பதற்காக இராணுவத்தின் இந்த இன அழிப்புக்கு மேலாக அரசாங்க இன வெறித் தலைவர்களின் காருண்யம்மிக்க பேச்சு மிக உரத்த குரலில்ஓங்கி ஒலித்திருக்கின்றது.

அத்துடன் இன அழிப்புக் கொடுமையை யாழ்குடா நாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பரவாமல் தடுப்பதிலும் அரசு வெற்றி கண்டிருக்கிறது. இவையெல்லாம் வெளி உலக அபிப்பிராயத்தை தமிழீழ மக்கள்வசம் மீண்டும் சாராமல் தடுத்திருக்கிறது. ஆயினும் தமிழ் மக்களின் இந்த தியாகங்களும், உயிரிழப்புக்களும் தமிழீழ போராட்டத்தின் வெற்றிக்கான உரமாக மாற்றியமைக்க வேண்டிய தேவையை போராடும் விடுதலை தாபனங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். உலக நாடுகளின் அனுதாபம் எமக்கு தேவைதான். ஆனால் அது ஒன்றிற்காகவே இத்தனை இழப்புக்களை நாம் அனுபவிக்க வேண்டும் என்ற சித்தாந்தத்தை மீள் பரிசோதனை செய்வது அவசியம்.

தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பின் எதிரொலியாக விடுதலைத் தாபனமொன்றின் வழிகாட்டலில்; யாழ்ப்பாணத்தில் பௌத்த விகாரை, சிங்கள மகாவித்தியாலயம் என்பன தாக்கப்பட்டிருப்பதும் அரசிற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. முன்னொரு பொழுதும் இல்லாதபடி இம்முறை யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் பௌத்த விகாரை, சிங்கள பாடசாலையை தாக்கிய உணர்ச்சி வேகத்தில் இளையோடும் விரக்தியையும், இயலாத் தன்மையையும் நாம் இனம் காண்கிறோம். ஆயினும் இத்தகைய நடவடிக்கைகள் எமது தமிழீழ இலட்சிய போராட்டத்தின் தார்மீக ஆதரவை மாசுபடுத்தவே செய்யும்.

பொதுமக்களை ஆயுதப் போராட்டத்திற்கு வளர்த்தெடுத்தல் என்பது, அவர்களை கட்டுப்பாடு, ஒழுங்கு, சரியான எதிரியை இனம் காணல் என்ற போராட்ட நடைமுறைகளுக்கூடாக வளர்த்தெடுப்பதாக இருத்தல் வேண்டும் பொதுமக்கள் எழுச்சி, போராட்டம் என்பன மகத்தான சக்திகள். இவற்றைத் தட்டி எழுப்பிய பின் வேடிக்கை பார்ப்பது விடுதலைப் போராட்டத்தை பலவீனப் படுத்தவே செய்யும்.

இந்த வன்முறையின்போது அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டு, இராணுவத்தின் காடைத்தனம் மீண்டும் ஒருமுறை அரங்கேறியதும் தமிழீழப் போராட்டம் இதுவரை கட்டிக்காத்து வந்த புனிதமான பாரம்பரியத்திற்கு மாறாக பௌத்த விகாரை, பௌத்த பாடசாலை தாக்கப்பட்டமையும் வேதனைக்குரியதே. இவை மீண்டும் நடைபெறாமல் எமது அரசியல், இராணுவ நடவடிக்கைகள் முற்போக்கானதாகவும் விவேகமானதாகவும் இருக்க வேண்டும் என்று விடுதலைத் தாபனங்கள் அனைத்தும் இம் மேதினத்தில் உறுதிபூண வேண்டுகிறோம்.

# ஒருங்கிணைப்பு குறித்து...

தமிழீழ விடுதலையை முன்னெடுத்து ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு போராடும் தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியன ஒன்றாக/இணைந்ததாக வெளி வந்த செய்தியை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

கடந்த காலத்தில் தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் தமிழீழ போராட்ட அமைப்புக்கள் ஐக்கியப்பட வேண்டுமென்று நாம் இதயபூர்வமான வேண்டுகோளை முன்வைத்து அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தோம். இம் முயற்சியில் எம்முடன் ஆரம்பத்தில் ஒத்துழைத்த தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்பன பின் அதிலிருந்து விலகி தனியாக ஒரு இணைப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இம் மூன்று இயக்கங்களும் இப்பொழுது ஏற்படுத்திய இணைவு முயற்சியில் நாம் கலந்துகொள்வதற்கு எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை. எமக்குத் தெரியாமல் இவ் இணைப்பு முயற்சி நிகழ்ந்தமையால் இவ்விணைப்பு முயற்சியில் எமது பங்களிப்பை செய்ய முடியவில்லை.

இம்மூன்று இயக்கங்களும் ஏற்படுத்திய இணைப்பின் அடிப்படைக் கொள்கையை எமக்குத் தெளிவு படுத்துவதன் மூலம் ஒரு பொது உடன்பாட்டில் இவ் இணைப்புக் குழுவுடன் ஐக்கியப் படுவதற்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் முன்வர ஏதுவாக இருக்கும். ஆகவே இவ் இணைப்புக் குழு எவ் அடிப்படையில் இணைந்துள்ளது என்பதை தெளிவு படுத்த வேண்டுமென்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறான இணைப்பு முயற்சியின் போது ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் தாபனங்களின் பங்களிப்புகளே முக்கியமானதாக இருக்க வேண்டுமேயன்றி தனி நபர்களோ அல்லது சிறீலங்கா பாராளுமன்ற ஆசனங்களுக்காக தமிழீழப் போராட்டத்தை மழுங்கடித்த சந்தர்ப்பவாத தலைமைகளோ ஊடுருவ இடம் அளிக்கக் கூடாது.

தமிழீழ போராட்டத்தை ஒரு முன்னேற்றகரமான திரும்புமுனையாக மாற்றி அமைப்பதற்கு ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு போராடும் அமைப்புக்களுடன் ஒரு பொது உடன்பாட்டில் ஐக்கியப் படும் கொள்கையிலிருந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஒருபோதும் விலகப்போவதில்லை என்று இதய சுத்தியுடன் வெளிப்படுத்துகின்றோம்.

இங்ஙனம்
**முகுந்தன்**
செயலதிபர்
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கேள்வி–பதில்

கிராமந்தோறும் உள்ள எமது கழக உறுப்பினர்கள் மூலம் எம்மை வந்தடையும் ஏராளமான கடிதங்கள் கட்டுரைகள், கேள்விகள் யாவும் 'புதியபாதை'யின் பணியினையும், அது மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் நாம் புரிவதற்கு உதவுகின்றன. ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு முக்கிய கேள்விக்கு விளக்கமாக விடை அளிக்க விரும்புகிறோம். பருத்தித்துறையிலிருந்து கிடைத்த கேள்விக்கு இங்கு பதிலளிக்கின்றோம். (ஆ-ர்)

**கேள்வி : தமிழீழ விடுதலைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல விழையும் எமது தமிழீழ மக்கள் விடுதலை கழகம், ஏனைய இயக்கங்களுடன் ஒன்று சேர்ந்து இயங்குவதில் உள்ள பிரச்சினைகள் என்ன? இவற்றிற்கு தீர்வு கண்டு நாம் யாவரும் ஒற்றுமையுடன் ஈழவிடுதலையை நோக்கி வீறுநடை போடுவது எவ்வாறு?**

பதில்:

இதற்கு ஒரே வசனத்தில் பதில் கூறிவிட முடியாது. ஓரளவு விரிவாகவே ஆராய வேண்டிய கேள்வியிது. புரட்சிகள் பொதுவாக இரண்டு காரணங்களுக்காக நடைபெறுகின்றன. முதலாளித்துவ ஒடுக்குமுறையால் நாட்டு மக்கள் சீரழியும்போது, ஒரு சோஷலிச சமுதாயத்தை நிறுவுவதற்கு புரட்சியை வேண்டி நிற்பது ஒரு காரணம். இப்புரட்சியில் ஒடுக்கும் முதலாளி வர்க்கம் ஒரு பக்கமும், ஒடுக்கப்படும் பொதுமக்களான பாட்டாளி விவசாய மக்கள் ஒருபக்கமுமாகக் காணப்படுவர். பாட்டாளி விவசாய மக்களே புரட்சியைத் தலைமை தாங்கி நடாத்திச் செல்வர். புத்திஜீவிகளும் முதலாளிவர்க்கத்தால் சுரண்டப்பட்ட நடுத்தர வர்க்கத்தினரும் புரட்சிக்கு ஆதரவு தரும் வகையில் புரட்சியாளர்கள் உள் முரண்பாடுகளைத் தீர்த்து முன்னேறுவதும் சாத்தியமாகின்றது.

சிறுபான்மையான ஒரு தேசிய இனம் ஒன்றை இன்னொரு பெரும்பான்மைத் தேசிய இனம் ஒடுக்கி அழிக்க முற்படும்போதும் சிறுபான்மைத் தேசிய இனம் (சி. தே. இ) புரட்சியை வேண்டி நிற்கிறது. சி. தே. இ என்பதும், பல வர்க்கங்களைக் கொண்டதொரு சமுதாயம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இங்கும் பாட்டாளி விவசாயிகளைக் கொண்ட மக்களே மிகப் பெரும்பான்மையினர் ஆவர். புரட்சி என்பது இரத்தம் சிந்தும் தியாகத் தன்மையுடையதென்பதால், இழப்பதற்கு ஒன்றும் இல்லாததும், மிகப் பெரும்பான்மையானோருமான தொழிலாள விவசாய சாதாரணப் பொதுமக்களே துப்பாக்கி ஏந்தி புரட்சிக்கு தயாராய் இருப்பவர்கள்; புரட்சிக்குத் துடிப்பவர்கள். ஆகவே புரட்சியின வெற்றியின் இறுதிப் பேற்றினை புரட்சிக்கு இரத்தம் சிந்திய மக்களே அடைய வேண்டும். ஆகவேதான் இனவிடுதலைக்கான புரட்சி, அதன் இறுதி நோக்காக, புரட்சிக்குத் தோள் கொடுத்த பொதுமக்களுக்கு இன விடுதலையுடன் பொருளாதார கலாச்சார சமூக விடுதலையும் கிடைக்கும்படி மெய்யான புரட்சிகரத் தலைமை உறுதிப்படுத்தல் வேண்டும். ஒடுக்கப்பட்ட இனத்துடன் முதலாளித்துவ வர்க்கம், நவ காலனித்துவத்தை விரும்பும் ஏகாதிபத்திய தாசர்கள் என்போரும் உண்டு என்பதை நாம் மறந்து விடலாகாது. வரலாற்றுச் சந்தர்ப்பங்களினால் இவர்கள் இன ஒடுக்குமுறை எனும் ஒரேயொரு கை விலங்கினால்தான் பூட்டப்பட்டுள்ளனர். அதை மட்டும் உடைத்தெறிந்து விட்டால், தம் இனத்தைத் தாமே முழு உரிமையுடனும் சுரண்டிக் கொள்ளலாம். என்பதுதான் இவர்களின் கருதது. இதில் வேடிக்கை என்னவென்றால் இனவிடுதலைக்கான புரட்சிக்கும் இவர்களுக்கும் வேண்டியது கீழ்மட்டத்து பொதுமக்களே. இவர்களைத் தம் பக்கம் எடுப்பதற்காகவே தாம் தலைமை தாங்கும் புரட்சியும் சோஷலிசப்பாதையே எனக் கூச்சல் போடுவர். சோசலிசம், மார்க்ஸிசம் உலக சோஷலிசப்புரட்சிகள்பற்றி மிக நுணுக்கமாக ஆராய்ந்து தாமே சோஷலிசத்துக்கு வாரிசுகள் என பெரிதும் விளம்பரப்படுத்துவர்.

இன ஒடுக்கல் உச்சநிலையை அடையும்போது பல இயக்கங்கள் உருவாதல் இயல்பே; இவற்றில் சித்தாநத ரீதியாக இணையக் கூடிய இயக்கங்களை முதலில் இனங்காண வேண்டும். சித்தாந்தத்தின் முககிய கோட்பாடுகள் 1. ஆயுதப்புரட்சியை ஏற்பது 2. அதன்மூலம் மெய்யான சோஷலிசததை நிறுவது. இக்கோட்பாடுகளுக்கு புறம்பானவற்றை நாம் விலக்கிக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக அமிர்தலிங்கத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நாம் இணையமுடியாதது எவர்க்கும் புரியும். சித்தாந்த ரீதியில் இணையக் கூடிய இயக்கங்கள் இவை இவை எனக் கண்டால் அவற்றிற்கும் எமக்கும் உள்ள முரண்பாடுகள் நேச முரண்பாடுகளே. இவற்றை எமது நேரடிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்வது சாத்தியமே. இத்தகைய பேச்சுவார்த்தைகளில் சில இயக்கங்களுடன் பல காலமாக ஈடுபட்டோம். இவை தோல்வியடைந்ததின் காரணத்தை எமது பிரசுரமாக வெளியிட்டிருந்தோம், பேச்சுவார்த்தைகளின் மூலம் நாம் எடுத்த முடிவு வருமாறு 1. இயக்கங்கள் சிலவற்றுடன் மீண்டும் பேச்சு வார்த்தைக்கு இடமுண்டு 2. ஏனையவற்றை நாம் விலக்கவேவேண்டும்; காரணம் இவ்வியக்கங்களின் தலைமை புரட்சி சோஷலிசம் என்பதே தமது கோட்பாடு என வெளியே கூறினாலும், அவர்களின் நடவடிக்கை, இணைப்பு கூட்டங்களில் நடந்து கொண்டமையாவும் இவர்களை எதிர்ப்புரட்சியாளர்கள், எம்முடன் பகை முரண்பாடு உடையோர் என்றே காட்டுகின்றது.

எனினும் நிலைமை தெளிவாகவே உள்ளது. இந்த எதிர்ப்புரட்சியாளத் தலைமையைத் தான் நாம் நிராகரிக்கிறோம். இவர்களின் பேச்சினை உண்மையென நம்பி இவர்களை ஆதரிக்கும் மக்களை நாம் வென்றெடுக்க வேண்டியது எமது கடமை. எமது இயக்கமானது மக்கள் மத்தியில் சென்றுகொண்டே இருப்பதால், இவர்களும் எமது இயக்கத்தினராகி விடுவர் என்பதில் ஐயம் இல்லை.

தலைமையை விட மக்களே முக்கியம் என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கை உண்டு. ஆகவே ஐக்கியம் என்பது ஈற்றில் மக்களால் ஏற்படுத்தப்படுவது. எமது சித்தாந்தத்தையும் செயல் முறையையும் மக்கள் ஏற்கும்போது நாம் மக்களுடன் இணைந்தவர்கள் ஆவோம். மக்கள் இயக்கத்தை ஏற்றுக் கொள்வதுதான் இறுதியில் ஒற்றுமையாகின்றது. :::

## மார்க்ஸ் ஏன் மார்க்சியம் படைத்தார்?

கார்ல் மாக்ஸ் ஒரு மானுடத்துவவாதி (Humanist) மனுக்குலத்தை நேசித்தவர்; கருணையுள்ளம் படைத்தவர்; மனிதனின் அவலநிலையைக்கண்டு நெஞ்சுருகிய காருண்யம் மிக்கவர்; ஆகவேதான் மனிதனின் துன்பநிலைக்குப் பரிகாரம் தேடமுனைந்தவர். பாட்டாளி மக்களின் புரட்சியே விடுதலை வழி எனக் கண்டவர். புரட்சி வழியைக் கண்ட காருண்யமிக்க மனிதாபிமானியே மார்க்ஸ், அவர் புலி அல்ல; அவர் வழிவந்த எவரும் புலிகள் சிங்கங்கள் எனத் தம்மைக்கூறிக் கொள்ளவில்லை. அறிவுத்திறன் படைத்த மனிதன் பின்னோக்கிச் சென்று தன்னை விலங்குடன் ஒப்பிடுவதில்லை.

அனுப்பியவர்: குமரன்-செங்கலடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் புரட்சிப் பாதையில்
## இன்றைய காலகட்டம் எது?

சிங்கள இனவாத அரசின் கெடுபிடிகளும், அடக்கு முறைகளும் உச்சநிலையை அடைந்தபோது இனித்தாங்க முடியாது தாமாகவே நேரடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என பல மட்டங்களில் எழுந்த ஒரு சுயமான விழிப்புணர்ச்சியின் பேறாகவே இளைஞர் பல கோஷ்டிகளாக, புரட்சிப்பாதை எனும் பெருகிப் பொங்கும் ஆற்றினை வந்து சேரும் சிறு கிளைகளாக ஊற்றெடுத்தனர்.

அக்கால கட்டத்தில், முதல் நடவடிக்கையாக துரையப்பா சுடப்பட்டார் அல்லவா? துரையப்பா ஏன் சுடப்பட்டார்? இது தனிப்பட்ட பழிவாங்கல் அல்ல. தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிராக, சிங்கள இனவாத அரசுக்கு தமிழ்த் தலைவர்கள் ஆதரவு உண்டு எனும் எண்ணத்தைப் பரப்புவதற்கான மகத்தான தொண்டினை துரையப்பா ஆற்றிவந்தார். ஆகவேதான் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையாய் நிற்பவர், காட்டிக் கொடுப்பவர் என்ற வகையில் துரையப்பா சுடப்பட்டார். தமிழ் புரட்சிகர இயக்கத்தின் ஆரம்ப வளர்ச்சிப்படி நிலையையே இது காட்டுகிறது. சமுதாய வளர்ச்சிப்படியில் கற்காலம், இரும்புக்காலம், மின்சாரக்காலம் என்பது போல் புரட்சியின் வளர்ச்சிக்கட்டத்தின் ஆரம்பநிலையே இது. அதற்காக நாம் என்றென்றும் கற்களையே ஆயுதமாகப் பாவிக்கும் கற்காலநிலையில் இருக்க முடியுமா? துரையப்பாவைக் கொன்ற நிலையிலிருந்து எத்தனையோ சிற்றாறுகள் கலந்து குமுறிப்பாயும் பேராறாக உருவாகிக் கொண்டிருக்கும் நிலையில் வளர்ந்துள்ள இயக்கம், தனிமனிதனைக் கொல்ல வேண்டிய காலத்திலிருந்து பெரும் தூரம் முன்னேறி விட்டது.

ஆகவே இன்றைய காலகட்டம்தான் யாது? சிற்றாறுகள் யாவும் ஒன்றிணையும் கட்டத்தில் நாம் இருக்கிறோம். தொடக்கத்தில் வெறும் பார்வையாளர்களாக இருந்து, புரட்சிக்குழுக்களின் தீரச் செயல்களைக் கண்டு புகழ்பாடிய மக்கள் இன்று தாமே புரட்சியாளர்களாக மாறும் கட்டம் இது. பொதுமக்கள் இன்று பங்குபெறத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் பெரியதொரு காட்டாறாய் பெருகும் நிலையை இன்று எதிர் நோக்குகின்றோம். தமக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு, அவல நிலைக்கு காரணம் யாது என மக்கள் அறிந்து கொண்டனர். அதைத் தீர்ப்பதற்கான சரியான வழியை கண்டு கொண்டனர். அந்த வழியே ஆயுதம் தாங்கிய போராட்டம். இதற்கென தம்மை தயார்ப்படுத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அநியாயமாக அவர்கள் சாவதை யார்தான் விரும்புவார்கள். ஆகவேதான் இந்த அநியாய இழப்புக்கான காரணத்தை நாம் தேடும்போது இந்த பழிவாங்கல் நடவடிக்கைகள் பிழையான பாதையென நாம் திட்டவட்டமாக காண்கிறோம்.

புரட்சிக்காக தம்மைத் தியாகம் செய்ய முன்வந்த ஒரு சில இளைஞர்கள் திசை தவறி பிழையான அணியில் சென்றுள்ளதை நாம் அறிவோம். கொள்கை விளக்கங்கள் இன்றியும், அரசியல் பார்வைகள் இன்றியும் இளைஞர்கள் தற்காலிகமாக பாதை தவறுவது இயல்பே. இந்த இளைஞர்களை நாம் கேட்டுக் கொள்வது ஒன்றுதான்.

''நாட்டின் சுதந்திரத்திற்காக போராடவந்திருக்கும் நாம் பாதையில் இருந்து விலகியுள்ளோமா என்பதை அடிக்கடி நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். இதுவே சித்தாந்த மொழியில் சுயவிமர்சனம் என்பது. நேற்றுவரை நாம் செய்து வந்த வேலைகளையும் இன்று விமர்சனம் செய்யும்போதுதான் நாளை ஆக்கபூர்வமாக மேலும் இயங்கமுடியும். பொதுமக்கள் இவ்வாறுதான் எமது வேலைகளை விமர்சிக்கிறார்கள். ''நேற்று இரண்டு இராணுவ வீரர்களை ஒரு கோஷ்டியினர் சுட்டார்கள், இன்று அப்பாவி மக்களும், பாடசாலை மாணவ மாணவிகளும், தாய்மார்களும் அரச இராணுவத்தின் கொடுமைக்களுக்குப் பலியானார்கள். இதனின்று நாம் படிக்க வேண்டிய பாடம் என்ன? நாளைநாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன? எனும் கேள்வினை இன்று மக்கள் வெளிப்படையாகக் கே[illegible]கின்றனர். சுயசிந்தனையுள்ள மக்கள் இவ்வாறே கேட்பார்கள், நாளை எமது நடவடிக்கைகள் என்ன? என்பதே இன்று மக்கள் மத்தியில் உதிக்கும் ஒரே கேள்வி. இதற்குரிய யதார்த்தமான விடை,

1. பழிவாங்கும் நடவடிக்கைகள் புரட்சிக்கு எதிரான நடவடிக்கை என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

2. இத்தகைய நடவடிக்கை எதிர்ப்புரட்சிகர தன்மை சமுதாயத்தில் கொண்டதால் சமுதாயத்தில் தலைதூக்கா வண்ணம் பதிலடி கொடுப்பதற்கு மக்களும் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த எதிர்ப் புரட்சி நடவடிக்கையானது மக்களுக்கு விரோதமானதும், அதேசமயம் சிங்கள இனவாத அரசுக்கு சார்பானதும் என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். எனவேதான் எதிர்ப் புரட்சியானது, அது தமிழ்த் தலைமையுடன் ஏற்பட்டாலும் எமது விடுதலைப் புரட்சிக்கு எதிரானதும், மக்களின் சுபீட்சத்திற்கு எதிரானதும் எனக் கணிக்க வேண்டும். எதிர்புரட்சிக்கு பதிலடி கொடுக்கும்போது ஒட்டு மொத்தமாக நாம் யாருக்கு எதிராகப் போராடுகிறோம். சிங்கள அரசுக்கெதிராகவே என்பதும் புலப்படும்.

வளர்ந்து வரும் எமது இயக்கம் அடிக்கடி சுத்திகரிக்கப் பட வேண்டியதே. எமக்குள்ளே முளைக்கும் எதிர்ப்புரட்சிகர அணிகளை இனங்கண்டு அவற்றை முளையில் கிள்ளி எறிவதும் ஒருவகை சுத்திகரிப்பு வேலையே.

எதிர்ப்புரட்சி இயக்கங்களைவளர்ப்பதும் புரட்சியணியில் பரவவிடுவதும் C.I.A, போன்ற உளவுத்தாபனங்களின் நிபுணத்துவ வேலையாகின்றது. உலகத்தின் பல புரட்சிகர இயக்கங்களை தற்காலிகமாக மழுங்கடிக்கச் செய்வதற்கு கட்சிக்குள் எதிர்ப்புரட்சிக் கிருமிகளை ஏவிவிட்டனர் CIA தாபனத்தினர். ஆனால் புரட்சி எனும் தத்துவம் ஆக்கபூர்வமானது, வளர வேண்டியது. அதனை அழித்துவிடவே முடியாது. புரட்சியாளர் மத்தியில் திருட்டுத்தனமாக விதைத்துவிடுவதே எதிர்ப்புரட்சி நடைமுறைகள். எதிர்ப் புரட்சி என்பது நேரடியாகவே வாதாடி புரட்சிகர மக்கள் முன்வைக்கும் ஒரு மாற்றுப்பாதை அல்ல. அது கள்ளத்தனமானது. சதிப்பண்பியல்பு கொண்டது. எனவேதான் அறநீதியில் அது வலுவற்றதாகின்றது. இனங்கண்டுவிட்டால் பாம்பைக் கொல்வதுபோல் அடித்துக் கொல்லக் கூடியது. எதிர்ப்புரட்சியை இனங் கண்டுவிட்டால் அதை ஒழித்துக் கட்டுவது மிகச் சுலபமாகிறது. இனங்காணும் வரையில்தான் எதிர்ப்புரட்சியாளர் புரட்சிகர அணியினுள் நின்று குட்டையைக் குழப்புவர். சில சமயங்களில் ஓரளவு குட்டையைக் குழப்பும்படி புரட்சிகர இயக்கங்கள் இந்த எதிர்ப்புரட்சிக் கிருமிகளை தம்மத்தியில் உலாவ விடுவர். பேராசையால் பெருமளவில் குட்டை குழப்பும்போது கையும் மெய்யுமாக பொது மக்களாலேயே இனங் காணப்படுவர் இவர்கள். இத்தகைய ஒருகால கட்டமே இன்று நிலவுகிறது யாழ்ப்பாணத்தில்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ★★★★★★★★★★★★★ விடுதலை நட்சத்திரம் ★★★★★★★★★★★★★

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஆரம்பகால அங்கத்தவரும், மத்தியகுழு உறுப்பினரும், படைத்துறைப் பொறுப்பாளராகக் கடமையாற்றியவருமான செயல் மறவன் இராஜதுரை ஜெயச்சந்திரன் 30-04-1984-ல் மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா கூலிப்படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார் என்கின்ற துயரச்செய்தியை மிகுந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

தமிழீழ விடுதலைக்கு உயிர்ந்து உரமேற்றிச் சென்று விட்ட கழகக் கண்மணிகள் வரிசையிலே தனனையும் ஒருவனாக அர்ப்பணித்துவிட்ட தோழர் ஜெயச்சந்திரனின் மறைவு — பேரிடியாய் — பெருநெருப்பாய் நம்மை வருத்துகின்றது. நிதானமும், தீர்க்க தரிசனமும், செயல்திறனும், கொள்கை உறுதியுமிக்க ஒரு வீரமறவனை நாங்கள் இழந்து விட்டோம். 'ஜெயா'வென்றும், 'பார்த்தன்' என்றும், அன்புடனும் உரிமையுடனும் அழைத்து மகிழ்ந்த எங்கள் அன்புத் தோழனை நாங்கள் பறிகொடுத்து விட்டோம்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் ஜெயச்சந்திரன் 1970ம் ஆண்டில் திருமலை இந்துக் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே பாடசாலைகளில சிங்களம் திணிக்கப்படுவதை எதிர்த்துக் கர்த்தால் என்றும், பகிஸ்கரிப்பு என்றும் உரிமைப்போர் தொடுத்து மாணவர் மத்தியில் பிரபலமானவர். திருமலை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளில் திட்டமிட்ட சிங்கள திணிப்பை தடுத்து நிறுத்தியவர்.

1977ம் ஆண்டில் சிங்கள இனவெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனத்திற்கு எதிராக துப்பாக்கி ஏந்தி சிங்களக் காடையர்களின் இராணுவத்தினரையும் எதிர்த்து நின்று போராடி மக்களைக் காத்தவர்.

அஞ்சாநெஞ்சமும் செயல்திறமையும் துடிப்பும் மிக்க தோழர் ஜெயச்சந்திரன் ஆரம்ப காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளராக இருந்து பல பயிற்சி முகாம்களை நடாத்தினார்.


இந்தக் காலகட்டத்தில் இவர் கற்ற அரசியல் கல்வியும் அனுபவமும் தனிநபர் பயங்கரவாதத்தின் சிறுமைகளையும், கொடுமைகளையும், குறைகளையும் இவர் அறிவதற்கு வாய்ப்பு அளித்தன. பரந்துபட்ட மக்களை ஓரணியில் திரட்டி அவர்களை அரசியல் மயப்படுத்தி அதன்பின் ஆயுதம் ஏந்தவைத்து நடத்தப்படும் மக்கள் புரட்சியின் மூலம்தான் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியும் என்று தெளிவாகத் திட்டவட்டமாக உணர்ந்த தோழர் ஜெயா இதன் அவசியத்தை தான் சார்ந்த இயக்கத்துள் வலியுறுத்தினார்.

பொதுவுடமைச் சித்தாந்தங்களில் ஈடுபாடுகொண்டு மார்க்சிச நூல்களைக் கற்றுத் தெளிந்து தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் பொதுவுடமைவாதிகள் ஆக்குவதில் முனைந்து நின்று செயல்பட்டார்.

இதன் பின் மக்கள் போராட்டங்களில் நம்பிக்கை வைதது அதற்காக உழைப்பதற்கு முன் வந்தார். காலத்துக்கு காலம் சிங்கள இன வெறியர்களால் அடித்து விரட்டப்படும் மலையக மக்களுக்கு வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்வும் வழியும், வசதியும் அமைத்துக் கொடுத்த ஜெயா திருகோணமலை மாவட்ட காந்திய அமைப்புச் செயலாளராக பொறுப்பேற்று ஆயிரக்கணக்கான மலையக மக்களுக்கு புனர் வாழ்வு அளிப்பதில் முன்னின்று செயலாற்றினார்.

1980ம் ஆண்டில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் திருகோணமலை மாவட்ட செயலாளராக நியமனம் பெற்று பகிரங்க அரசியலில் ஈடுபட்டார். ஒரு கவிஞனான இவர் இக்கால கட்டத்தில் விடுதலை பத்திரிகை ஆசிரியராக இருந்ததோடு மக்களை எழுச்சி கொள்ள வைக்கும் இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

1981ம், 1983ம் ஆண்டுகளில் திருகோணமலையில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரத்தின்போது ஆயுதமேந்திப் போராடி மக்களைக் காத்த தோழர் ஜெயாவிற்கு 1983ம் ஆண்டு மேன்காமம் அரசினர் தமிழ் பாடசாலை



யில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அதேவருடம் தமிழீழப் பிரிவினைக் கெதிராக சிறீலங்கா அரசால் கொண்டு வரப்பட்ட சத்தியப் பிரமாண சட்டத்தை ஏற்க மறுத்து அதாவது-சிங்கள ஸ்ரீலங்காவிற்கு விசுவாசமாக இருக்க மறுத்து பதவியைத் துறந்தார். இதன் பின்பு தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்காக முழுநேரம் உழைத்து வந்தார். மட்டக்களப்பு சிறை உடைப்புச் சம்பவத்தின் முக்கிய பங்காற்றி சிறை மீண்டவர்களை — பத்திரமான இடங்களுக்கு கொண்டு சேர்க்கும் பெரும் பணியை செவ்வனவே நிறைவேற்றி வைத்தார்.

தமிழீழப் போராட்டம் மலையக மக்களுக்கும் முடிவு தரும் வகையில் விசாலமடையவேண்டும்—என்ற எண்ணத்தை செயல் வடிவில் காட்டுவதற்காக — மலையக மக்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கும் பணியையும் — செவ்வனவே நிறைவேற்றி வந்த தோழர் ஜெயாவின் புகழ் — திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்ல அதற்கப்பாலும் பரந்து விரிந்திருந்தது.

சிறீலங்கா அரசு இவரைக் காணுமிடத்தில் சுட்டுக் கொல்லும்படி தனது கூலிப்படைக்கு உத்தரவும் இடும்

www.tamilarangam.net



# தலைக்குமேல் பிரச்சனைகள்...

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, பின் ஒதுங்கிக்கொண்ட வெளிநாட்டில் வதியும் ஆசிரியர் ஒருவருக்கு தோழர் இராஜ ஜெயசந்திரன் எழுதிய கடிதம் ஒன்றின் இறுதிப் பகுதியை கீழே தருகின்றோம். குமுறும் அவர் உள்ளம் விடுக்கும் வேண்டுகோள் அந்த ஆசிரியருக்கு மாத்திரமல்ல. தமிழ் மக்கள் அனைவருக்கும் தான்.

நீங்கள் இந்தியாவிற்கு அனுப்பியுள்ள கடிதம் கிடைக்கப் பெற்றேன். மேலும் உங்கள் சொந்தப் பிரச்சினை காரணமாக இந்த [illegible] என எழுதியிருக்கிறீர்கள். இது எந்தளவு சாத்தியமானது என்று நீங்கள் கருதுகிறீர்கள். நீங்கள் திருமலையில் 60 மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்த வழிவகுத்தீர்களே அந்த மாணவர்களுக்கு சொந்தப் பிரச்சினைகள் இல்லையோ? தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக போராடி தமது உயிரை இழந்த மாவீரன் [illegible] (சிவ - [illegible]) க்கு சொந்தப் பிரச்சினைகள் இல்லையா? இன்று தமிழ்நாட்டிற்காக போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு சொந்தப் பிரச்சினைகள் இல்லையா? இவர்களெல்லாம் தங்கள் சொந்தப் பிரச்சினைகளை [illegible] தமிழ்நாட்டிற்காக போராடுகிறார்கள். இது பற்றி சற்று சிந்தித்துப் பார்த்து உடன் பதில் எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். தற்போது நான் அரசியல் காரணமாக இந்தியாவில் நிற்கின்றேன். விரைவில் தமிழீழம் செல்லவிருக்கிறேன். பதில் கடிதத்தை கீழ் காணும் விலாசத்திற்கு எழுதவும். விரைவில் பதில் தேவை.

இப்படிக்கு
உங்கள் மாணவன்

R. PARTHAN

இ. பார்த்தன்

TRINCOMALEE

25/11/83

---

அளவுக்கு இவர் ஒரு முக்கியமான போராளியாக விளங்கினார்.

கடந்த மாதம் ஆரம்பத்தில் வடபகுதிக் கிராமம் ஒன்றில் கழகத் தோழர்களுக்கு அரசியல் வகுப்பு நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் சிறீலங்கா இராணுவம் எதிர்பாராத விதமாக அவர்கள் இருந்த இடத்துக்குள் நுழைந்தது. அந்த நிலையிலும் மன உறுதி தளர்ந்து எதிரியிடம் மண்டியிட முனையாமல் தன்னிடம் இருந்த ஒரே ஒரு துப்பாக்கியை எடுத்து எதிரியை நோக்கி குறிவைத்தார். நவீனரக துப்பாக்கிகளுடனும் இதர ஆயுதங்களுடனும் வந்திருந்த இராணுவ வீரர்கள் தோழர் ஜெயாவின் தீரமிக்க இந்தச் செயலைக் கண்டு அஞ்சி நிலை குலைந்து நிலத்தில் வீழ்ந்து படுத்தனர். இந்த சந்தர்ப்பத்தை வெகு நிதானமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் பயன்படுத்திக் கொண்ட தோழர் ஜெயா அந்த இடத்தில் இருந்து கழகத்

> தோழர் இராஜதுரை ஜெயசந்திரன் மறைவையொட்டி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் 30-4-84 ல் இருந்து 7-5-84 வரையுள்ள ஒரு வார காலத்தை துக்க தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது, பயிற்சி முகாம்களில் கழகக்கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும். பயிற்சியின் ஆரம்பத்திலும் இறுதியிலும் தோழர் ஜெயாவிற்கு மௌனஅஞ்சலி செலுத்தப்படும்.

தோழர்களையும் தப்ப வைத்ததோடு தப்பித்துச் சென்றார். அவர் நினைத்திருந்தால் அன்றைக்கு அங்கே வந்திருந்த அத்தனை இராணுவ வீரர்களையும் கொன்று குவித்து ஆயுதங்களை கைப்பற்றி வந்திருக்கலாம். அதை ஒரு சாதனையாகவும் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்திருந்தால் அந்தக் கிராமம் அழிக்கப் பட்டிருக்கும். பல நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பார்கள். ஒரு சில விநாடிகளுக்குள் நெருக்கடிக்கு மத்தியிலும் தோழர் ஜெயா மேற்கொண்ட முடிவு ஆயுதங்களைக் கையாள்வதில் அவருக்கு இருந்த தெளிவையும், கொள்கை உறுதியையும் புலப்படுத்தியதோடு மக்களுக்குப் பாதிப்புத்தரும் செயல்களை செய்வதில்லை என்ற கழகக் கொள்கையையும் பிரதிபலித்தது.

நான் ஒருபோதும் எதிரியிடம் சரணடையமாட்டேன் இறுதிவரை எதிரியிடம் போரிட்டே மடிவேன் என்று அடிக்கடி கூறிக்கொள்ளும் தோழர் ஜெயச்சந்திரனின் இழப்பு எங்களுக்கெல்லாம் பேரிழப்புத்தான் என்றாலும் அதற்காக நாங்கள் அஞ்சி அடங்கி ஓய்ந்து எமது இலட்சியத்தில் இருந்து விலகிக் கொள்வோம் என்று யாராவது கணக்குப் போட்டால் அவர்களது கணக்கு தப்புக் கணக்காகவே இருக்கும். எங்களது கண்களில் இருந்து வடிவது வெறும் கண்ணீரல்ல, எதிரியை அஞ்சி நடுங்க வைக்கப் போகின்ற செந்நீர். புண்பட்ட எங்கள் நெஞ்சங்களில் இருந்து வெடித்துக் கிளம்புவது வெறும் பெருமூச்சல்ல, சிங்கள இனவெறியை சுட்டுப் பொசுக்கப் போகின்ற பெரு நெருப்பு.

ஒரு மரத்தை அழித்து விடுவதன் மூலம் ஒரு காடு பாலைவனம் ஆகிவிடாது என்பதை நாங்கள் வெகு விரைவிலேயே சிறீலங்கா கூலிப்படைகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நிரூபிக்கும் வகையில் எங்களது இலட்சியத்தில் கழகத்தின் கொள்கை வழி நின்று வீறு கொண்டெழுந்து முன்னேறுவோம் எதிரியை முறியடிப்போம். தமிழ் ஈழத்தை வெல்வோம். தோழர் ஜெயாவின் கனவை நனவாக்குவோம். இது உறுதி.

எந்த இலட்சியத்துக்காக எமது தோழர்கள் உயிரை விட்டார்களோ எந்த மக்களின் விடுதலைக்காக, அவர்கள் இரத்தம் சிந்தினார்களோ, அந்த தமிழ் ஈழ இலட்சியத்தை அந்த தமிழீழ மக்களின் விடுதலையை பெற்றுக் கொடுப்பது ஒன்றுதான் நாம் எமது தோழர்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

வெல்க தமிழீழ போராட்டம்
வாழ்க தோழர் ஜெயாவின் பணி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தானத்தில் குதிக்கிறது. அதன் கூடவே நானும் கீழே விழுகிறேன், இடையே காரெக் கூறியது மட்டும் காதில் கேட்கிறது.

''அப்பா! அப்பா! கேட்கிறதா? பாவம்! இறுதி மூச்சு விடுகிறான்''

காலையில் டாக்டர் வந்தார்.

ஆனால் இவைகளையெல்லாம், பிற்காலத்தில் மிகவும் பிற்காலத்திலேயே அறிந்தேன்.

அவர் வந்தார்; என்னைப் பரிசோதித்தார். தலையை அசைத்து விட்டு ஆஸ்பத்திரிக்குப் போனார். வயித்திய ரிப்போர்டை எடுத்து, என் பெயருக்கு முன் நேற்று மாலையில் எழுதப்பட்டிருந்த ''மரணம்'' என்ற வார்த்தையை அடித்துத் திருத்திவிட்டு ஒரு நிபுணரின் சுய திருப்தியோடு கூறினார்:

''அவனுக்கு ஒரு குதிரையின் வலுவிருக்கிறது''.

மே தினத்தைப்பற்றி எழுதப் போகிறேன் என்றவுடன் பட்டொளி வீசிப்பறக்கும் கொடிகளைப் பற்றி எழுதுவேன் என்று எதிர்பார்க்காதீர்கள். அதைப் பற்றி எழுதப் போவதில்லை. உணர்ச்சிகரமான சம்பவங்களைப் பற்றி வர்ணிப்பேன் என்று நினைக்க வேண்டாம். அப்படிப்பட்ட வர்ணனைகளை மக்கள் நிரம்ப விரும்புகின்றனர் என்பது உண்மையே. ஆனால், நான் அப்படிப்பட்ட கட்டுரையையும் தீட்டவில்லை. அப்படிப்பட்ட சமபவங்களை விட மிகமிகச் சாதாரணமான நிகழ்ச்சிகளையே இப்போது எழுதுகிறேன், ஏனெனில், இப்போது இவ்விடத்தில், முந்திய வருடங்களில் பிரேக் நகர வீதிகள் மே தினத்தன்று வானமதிரக் கோஷமிட்டு ஆயிரக்கணக்கான கொடிகளை பறக்கவிட்டு பவனி வந்த. லக்ஷோப லக்ஷ ஜனங்கள் பிரசன்னமாகி இருக்கவில்லை. மாஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் ஆழி அலைகளைப் போல் சாரை சாரையாக அணி வகுத்துப் போகும் லக்ஷக்கணக்கான மக்களும் இங்கு இல்லை. லக்ஷக்கணக்கான பேர் அல்ல; நூற்றுக்கணக்கானவர்கள் கூட இங்கு இல்லை. விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சில தோழர்கள்தான் இருக்கிறார்கள். இருந்தாலும் முக்கியத்துவத்தில் அந்த மகத்தான அணிவகுப்புகளுக்கு இது எவ்விதத்திலும் குறைந்ததல்ல. ஏனெனில், இங்கு நீங்கள் பார்க்கும் காட்சி அலாதியானது. இங்கு புதிய உலக சக்திகள் வீதி அணிவகுப்பில் விமர்சிக்கப்படவில்லை. கொஸ்ர நெருப்பு ஆற்றிலே பரீட்சிக்கப்படுகின்றன நெருப்பு ஆற்றில் எதிர் நீச்சு நீந்தும்போது அவைபொசுங்கிச் சாம்பலாகிவிடவில்லை; வலுவுள்ள எஃகாக உருவாகின்றன. வீதியில் அல்ல, போர்முனை அகழிகளில் நடைபெறும் விமர்சனம் இது. அகழிகளில் சாம்பல் நிறமான போர்க்கள உடையை அணிந்து நிற்கிறோம் நாங்கள்.

மிகமிகச் சிறிய காரியங்களைச் செய்வதன் மூலம், இந்தப் பரீட்சை இங்கு நடத்தப்படுகிறது. போராட்ட உலைக்களத்தில் புகுந்து வராத உங்களுக்கு இதைப் புரிந்து கொள்ள முடியுமோ, முடியாதோ சந்தேகம்தான். ஒருவேளை புரிந்து கொண்டாலும் கொள்ளலாம். நான் சொல்கிறேன். நம்புங்கள் சக்தி இங்குதான் பிறந்து கொண்டிருக்கிறது.

காலை. அடுத்த அறையிலுள்ள தோழர் சுவரில் தட்டுகிறார். அது பீத்தோவன் பாட்டின் தளம் அது. காலை வாழ்த்துக்கள். மற்ற நாட்களைவிடப் பலமாக இன்று அவர் தாளம் போட்டு வாழ்த்துகிறார். மற்ற நாட்களை விட இன்று அது பரவசமாக ஒலிக்கிறது. ஸ்தாயியை உயர்த்திப் பேசுகிறது சுவர்.

இருக்கிற ஆடைகளில் சிறந்ததை எடுத்து உடுத்திக் கொள்கிறோம். எல்லா அறைகளிலும் இப்படியே.

காலைச் சாப்பாடு குதூகலத்துடன் நடக்கிறது. ஏவல் கைதிகள் திறந்த அறைக்கு முன்வரிசையாகக் காப்பி, ரொட்டி, தண்ணீர் ஆகியவற்றைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். தோழர் ஸ்கொரிபா, வழக்கத்துக்கு மாறாக இரண்டுக்கு பதில் மூன்று பன்ரொட்டிகளை என்னிடம் தருகிறார், அது அவருடைய மேதின வாழ்த்து. உஷாராக இருக்கும் அவர், தன் உணர்ச்சிகளை வெளியிட ஏதாவது சாதாரணமான காரியத்தை இவ்விதம் யோசித்துச் செய்கிறார். பன்ரொட்டிக்கு அடியில், என்னுடைய விரல்களை அவருடைய விரல்கள் இலேசாகப் பிடித்து அழுத்துகின்றன. அதில் உணர்ச்சிகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. யாரும் பேசத் துணிவதில்லை. கண்ஜாடை காட்டுகிறார்களோ என்று பார்க்க, காவல்காரர்கள் எங்களுடைய கண்களையும் விடாமல் கவனிக்கிறார்கள். ஆனால் ஊமைகளுக்கு தங்களுடைய விரல்களாலேயே மிகவும் தெளிவாகப் பேசிக் கொள்ள முடியும்.

எங்கள் ஜன்னலுக்குக் கீழே பெண் கைதிகள் உடற்பயிற்சிக்காக ஓடுகிறார்கள். மேஜைமேல் ஏறி நின்று, கம்பிகளில் முகத்தை வைத்து நான் அவர்களைப் பார்க்கிறேன்; அவர்கள் ஒருவேளை மேலே அண்ணாந்து பார்க்கலாமல்லவா? அவர்கள் என்னை அண்ணாந்து பார்க்கிறார்கள். முஷ்டியை மடக்கி லால் சலாம் செய்கிறார்கள். திரும்பவும் சலாம் செய்கிறார்கள். கீழே இன்றைக்கு மற்ற நாட்களை விடக் குதூகலமாக இருக்கிறது. வாஸ்தவத்திலேயே குதூகலமாக இருக்கிறது. இதை எல்லாம் காவல்காரர்கள் பார்க்கவில்லை. ஒரு வேளை பார்க்க விரும்பவில்லையோ என்னவோ, அதுகூட மேதின அணி வகுப்பில் ஒரு பகுதிதான்.

எங்கள் உடற்பயிற்சிக்கு நேரம் வருகிறது. பயிற்சியை முன்னின்று நடத்தும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. இன்றைக்கு மேதினம் ஆகவே, நாம் ஏதாவது புதிய பயிற்சியை—காவல்காரர்கள் பார்த்தாலும் பொருட்படுத்தாமல்—செய்யவேண்டும்; முதல் பயிற்சி சுத்தியை ஓங்கி ஓங்கி அடிப்பது போன்ற பாவனை. ஒன்று இரண்டு ஒன்று இரண்டு! அது முடிந்தவுடன் இரண்டாவது பயிற்சி. அறுவடை செய்வது போன்ற போன்ற பாவனை, சுத்தியும் அரிவாளும்—தோழர்கள் புரிந்து கொள்கிறார்கள். வரிசை முழுவதிலும் ஒரு புன்னகை பரவுகிறது. எல்லோரும் உற்சாகத்துடன் பயிற்சியைச் செய்கிறார்கள். இதுதான் நம் நம் மேதின அணிவகுப்பு, தோழர்களே. இந்த அபிநயம் தான் நம் மேதினப் பிரதிக்ஞை, நாம் உறுதியாக இருப்போம்; சாவை எதிர்நோக்கி நடப்பவர்களும் உறுதியாக இருப்போம்—இதுதான் அபிநயத்துக்கு அர்த்தம்.

அறைக்குத் திரும்புகிறோம். மணி ஒன்பது கிரம்ளின் மணிக் கூண்டில் பத்து மணி அடிக்கிறது. செஞ்சதுக்கத்தில் அணிவகுப்பு ஆரம்பமாகிறது. கவனியுங்கள் அவர்கள் சர்வ தேசிய கீதம் பாடுகிறார்கள். உலகம் முழுவதிலும் ஒலிக்கிறது அந்தக் கீதம். நம் அறையிலும் அது கம்பீரமாக ஒலிக்கட்டும். நாங்களும் அதைப் பாடுகிறோம். பிறகு ஒன்றன் பின் ஒன்றாய்ப் பல புரட்சிப் பாட்டுக்கள் தொடருகின்றன. நாங்கள் தனிமையில் இருக்க விரும்பவில்லை— இருக்கவுமில்லை. நாம், உலகத்தில் சுதந்திரத்துடன் பாடத் துணிவு கொள்கிறவர்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள் யுததகளத்தில் சமர் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தம்மைப் போலவே...

குளிர்ந்துறைந்த சுவர்கள் கொண்ட
கொட்டடிச் சிறைக்குள்ளே
இருந்து வாடுகின்ற என்றன்
இனிமையான தோழர்காள்
இன்று எங்கள் அணிவகுப்பில்
இல்லை நீங்கள்? ஆயினும்
என்றும் எங்களோடு நீங்கள்
இருக்கிறீர் இருக்கிறீர்.

ஆம். நாங்கள் உங்கள் அணியில் தான் இருக்கிறோம்.

புரட்சியின் போர் வீரர்கள் மே தினத்தன்று அணி வகுத்துப் போவதை எத்தனையோ தடவை நீ பார்த்திருக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலை காண...

"தமிழீழப் போராட்டம் ஆயுதமேந்திப் போராடும் இளைஞர்களின் கரத்திலேயே தங்கியுள்ளது. அவர்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்" என்ற நோக்கத்தை மீண்டும் ஒரு தடவை பிரகடனப்படுத்திக் கொண்டு ஜூன் 8இல் நியூயோக் நகரத்தில் இரண்டாவது உலக தமிழ் மாநாடு கூட்டப்பட இருக்கின்றது. இரு வருடங்கட்கு முன்பு கூட்டப்பட்ட 1வது உலக தமிழர் மாநாட்டின் நோக்கத்திலிருந்து இன்றைய நோக்கம் மாறுபட்டதாயினும் நாம் பின்வரும் காரணங்களை மாநாட்டுப் பொறுப்பாளர்களிடம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

1. தமிழீழப் போராட்டம் த, வி. கூட்டணியினால் 1976இல் பிரகடனப்படுத்தப்பட்ட பின்பு அதை வென்றெடுப்பதற்கு த. வி. கூட்டணியினால் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மக்கள்




1ஆவது நியூயோர்க் உலகத் தமிழ் மகாநாட்டில் அமெரிக்க ஏகாதிபத்திய கொடியின் நிழலில் பறக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் கொடி.

த. வி. கூ. யின் ஜே ஆர் சார்பு—அமெரிக்க ஏகாதிபத்திய சார்பு போக்கை வன்மையாகக் சண்டிக்கின்றார்கள். புதிய தலைமையை தமிழீழ மக்கள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் தமிழீழ மக்களால் தூக்கி வீசப்பட்ட தலைவர்களை மீண்டும் முன்னிலைக்குக் கொண்டுவரும் கைங்கரியத்தை உலகத் தமிழர் மாநாடு செய்யவேண்டியதில்லை.

2. 1வது உலகத்தமிழர் மாநாட்டில் த. வி. கூட்டணியின் உதயசூரியன் கொடியையே தமிழீழக் கொடியாக பிரகடனப்படுத்தி அதனை ஏகாதிபத்திய அமெரிக்காவின் கொடியின் கீழ் பறக்கவிட்டு தமிழீழ மக்களை அவமானப் படுத்தியிருந்தார்கள். இன்றைய சிங்கள இராணுவத்திற்கு இந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் ஆயுத, நிபுணத்துவ உதவிகள் மூலம் தமிழீழ மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமான வன்முறையை கட்டவிழ்த்துவிட பின்னணியில் செயல்பட்டது வெள்ளிடைமலை. இந்நிலையில் தமிழீழ மக்களின் உணர்வுகளுக்கு விரோதமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியில் தமிழீழ போராட்டத்தை தாரைவார்க்க இம் மாநாடு முயலக் கூடாது.

3. இன்று தமிழீழ மக்கள் வாழ்வா சாவா என்ற நிலையில் கடுமையான போராட்டத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கட்கு தேவையானது நவீன ஆயுதங்கள், பண உதவிகள். இவற்றை வழங்குவதற்கு இம் மாநாடு ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக்க வேண்டும். தமிழீழப் போராளிகளுக்கு உதவுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதே இன்றைய தேவையாகும்.

4. தமிழீழத்தை பெறுவதற்கான போராட்டங்கள் பற்றி அக்கறைப்படாமல் அரசியல் யாப்பு, தமிழீழ எல்லை, அயலுறவு கொள்கை, நீதித்துறை கொள்கை போன்றன குறித்து இம் மாநாடு பெரிதும் அலட்டிக் கொள்கிறது. ஆனால் இம் மாதிரியான விடயங்கள் குறித்து தமிழீழவிடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடும் போராட்டத் தாபனங்களே முடிவுகளை மேற்கொள்ள வேண்டியவர்கள். இத்தகைய விடயங்கள் குறித்தும், போராடும் விடுதலைத் தாபனங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன என்பதையிட்டு நாம் திருப்திப்படுகின்றோம் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

5. இம் மாநாட்டின் 2ம் நாள் நிகழ்ச்சியில் ஆராயப்படும் விடயங்கள் உருவாகும் தமிழீழத்தை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எப்படி த்தாரைவார்த்துக் கொடுப்பதென்பதற்கான வகையில் ஒரு தரகு முதலாளித்துவ தமிழீழமாக எப்படி மாற்றி அமைப்பதென்பதிலேயே குறியாக இருக்கின்றது.

ரோம் நகரம் பற்றி எரிகையில் நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையாக 2ம் உலக தமிழர் மாநாடு அமைந்துவிடக்கூடாது என்று தமிழீழ மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

---

மே தினம் தொடர்ச்சி

கிறாய் அது கனஜோர். ஆனால் இந்தச் சேனையின் சக்தியை, போராட்டத்தில் மட்டுமே பார்க்க முடியும் அது வெல்லற்கரியது என்று உணர முடியும். சாவு நீ நினைத்தபடி கனமானது அல்ல. வீரம் எந்த ஜோதியினாலும் சூழப்பட்டிருக்கவில்லை. ஆனால் போராட்டம் கொடூரமானது. நீ நினைத்ததைவிடக் கொடூரமானது. அதில் இறுதி வரை தாக்குப் பிடித்து நிற்பதற்கும், இறுதியில் வெற்றியடைவதற்கும், கணக்கிட முடியாத் அளவுக்குப் பலம் வேண்டியிருக்கிறது. இந்தச் சேனை நடை போட்டுப் போவதை நீ பார்க்கிறாய், ஆனால், இதன் பலம் எத்தகையதென்பதை எப்போதுமே சரியாக உணர்கிறாய் என்று சொல்வதற்கில்லை. இது கொடுக்கும் அடிகள் ரொம்ப சாதாரணமானவை. முறையானவை. :::

இன்றைக்கு இதை நீ சரியாக உணர்கிறாய்.

---

***உங்கள் கைகளில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்ப்புரட்கியாளரினதும் கடினமான தடைகளை மீறியே வந்து சேருகின்றது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது ஏனையோருக்கும் படிக்கக் கொடுக்கவும். வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்புப்பிரிவு, தமிழீழ மக்கள் விடுதலை கழகம்.***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எம் இளம் தோழர்களே!

# உங்கள் மரணம் எவ்வளவு மகத்தானது!

கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் காடைத்தனம் மீண்டும் ஒரு தடவை கட்டவிழ்த்து விடப்பட்டது. வீதியில் போவோர்வருவோர், பெண்கள்முதியவர் பாடசாலை மாணவர்கள் என்ற பேதமின்றி மிருகத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டு யாழ்ப்பாணம் சுடுகாடாகக் காட்சி அளித்தது.

இராணுவத்தின் காட்டுத் தர்பார் கண்டு மௌனக் கண்ணீர் வடித்த கேதீஸ்வரன், கிருபாகரன் என்னும் இரு இளைஞர்கள் இரு தினங்களாக காயம்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதிலும் அவர்கள் உறவினர்களுக்கு செய்தி அறிவிப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டார்கள், 11ஆம் திகதி காலை 10-30 மணியளவில் இதே மாதிரியான கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் இவர்கள் இராணுவத்தால் கைது செய்யபட்டு உடனடியாக யாழ் நாகவிகாரைக்கு கொண்டுசெல்லப்பட்டார்கள். அங்கு இராணுவத்தால் சுட்டு கொல்லப்பட்ட சடலங்களின் மத்தியில் துப்பாக்கிச் சூட்டால் காயம்பட்ட சிலர் குற்றுயிராக முனகிக்கொண்டிருந்தனர். குற்றுயிராக இருந்தவர்களை பெற்றோல் ஊற்றி எரிக்கும்படி இராணுவம் இவர்களுக்கு கட்டளை பிறப்பித்தது. தோழர்கள் நெஞ்சுபதறியது. எதிரியின் நெஞ்சுக்கு எதிராக மட்டும் துப்பாக்கி ஏந்தத் துடிக்கும் கரங்கள், தமிழ் மக்களை அரவணைத்த கரங்கள், இந்தக் கொடுமைக்கு தயாராகுமா? அந்தக் கொலை வெறியர்களிடம் 'முடியாது' என தீர்க்கமாக மறுத்து நின்றார்கள். விளைவு? மறு கணமே அந்த இரு போராளிகளும் ''அம்மா'' என்ற குரலோடு துப்பாக்கி வேட்டுக்கு இரையாகி அதே இடத்தில் மண்ணில் சாய்ந்தார்கள்.

இவர்கள் சாவை எதிர் கொள்வதற்கு முதல் நாள் இரவு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சிலர் ''இனியும் நீங்கள் ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் இயக்கமும் இராணுவத்தை தாக்குவதுதானே'' என்ற ஆக்கிரோசமான கேள்விக்கு இந்தப் போராளிகள் அளித்த பதில் இதுதான், இத்தகைய சிறு தாக்குதல்கள் எதிரியைப் பலப்படுத்தவே செய்யும். தாக்குதல் நடத்தியவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வர், ஆனால் அழிவுகளுக்குள்ளாவது பாதுகாப்பற்ற பொதுமக்கள்தான் என்றனர். ஆனால் மறுநாள் இவர்கள் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப் போய் தம் உயிரைப் பலி கொடுத்து நின்றார்கள்.

கேதீஸ்வரன் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பலகாமம் என்னும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவர். கிருபாகரன் கொக்குவிலை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர்கள் இருவரும் கழகத்தில் ஆரம்பகால உறுப்பினர்கள். பொதுமக்கள் மத்தியில் பிரச்சாரம் சமூக சேவை போன்ற பொறுப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

ஆயுதப் போரில் சிங்கள இராணுவத்தை எதிர் கொள்ள விரும்பிய இவ்விரு போராளிகளும் நிராயுத பாணிகளாக மரணத்தை எதிர் கொண்டது துர்அதிட்டமே. ஆனாலும் இவர்கள் மரணம் பரிதாபகரமானதல்ல. தளராத நெஞ்சுறுதியுடன் திடமான கொள்கைப் பற்றுடனுமே அந்த மரணத்தை எதிர் கொண்டார்கள். இவர்கள் மரணம் ஆயிரக்கணக்கான உறங்கும் இதயங்களை விழிக்கச் செய்யும்.

## மக்கள் நீதிமன்றங்கள்

ஏப்ரல் 10ஆம் திகதி யாழ். அடைக்கலமாதா தேவாலயம் இராணுவத்தின் கவச வாகனத்தால் தாக்குதலுக்குள்ளாகியது. அச்சமயம் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் மயிரிழையில் உயிர்தப்பினார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடும்பொழுது ''இது தற்செயல் விபத்து'' என்றும். ''இதுபற்றி தேவாலயம் பொலீசில் முறைப்பாடு ஏதும் செய்யவில்லை என்பதில் இருந்து இது ஒரு சாதாரண விடயம்'' எனவும் அறிவித்தார்.

சிறுபான்மை மக்கள் தமக்கெதிரான அநீதிகள் குறித்து பொலீசில் முறையிடலாம் என்ற விடயத்தை மறந்து நீண்ட காலமாகி விட்டது.

---

***" மனிதன் எப்பொழுது தோல்வியடைகிறான் தெரியுமா? தனது தோல்வியைத் தானே ஒப்புக் கொள்ளும் பொழுதுதான்."***

— நேத்தாஜி

www.tamilarangam.net



# ஆயுதப் புரட்சியும் தனிநபர் பழிவாங்கலும்

*[“உயிரிழந்த எனது தோழர்களுக்காக நான் பழிவாங்கச் சபதம் ஏற்கப்போவதில்லை. அவர் களது உயிர்கள் விலைமதிப்பற்றவை. இந்தக் கொலைக்காரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தால் கூட அதற்கு ஈடாகாது. அவர்களது உயிருக்கு இரத்தம் சிந்துவதன் மூலம் மரியாதை செலுத்திவிட முடியாது. அவர்கள் நேசித்த மக்களின் சுபிட்சமே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்க முடியும்”]*

— “பிடல்காஸ்ட்ரோ’

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போர் என்பது தனிப்பட்ட கோபதாபங்களைத் தீர்ப்பதற்கு, ஈடுபடுவதொன்றல்ல; நாம் ஏன் இராணுவத்துடன் மோதுகின்றோம்? மக்களை ஒடுக்கும் அரசு என்பது இராணுவம் என்னும் அமைப்பிலேயே தங்கியுள்ளது. அரசை எதிர்ப்பதெனில், இராணுவ இயந்திரம் எனும் முழுமையானதொரு வடிவத்தையே நாம் எதிர்த்துப் போராடுகிறோம். இராணுவமோ எம்மை அழிக்கும் அதன் பணியினைப் புரிகின்றது. ஆகவே இங்கு தனிப்பட்ட கோபதாபமோ, தனியொரு இராணுவ வீரனை வஞ்சந்தீர்ப்பது என்ற எண்ணமோ ஒரு புரட்சிகரப் போராளிக்கு இருக்க வேண்டிய கொள்கை அல்ல. இதனை புரட்சிகரப்போராளிகளாகிய நாம் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

இதனை ஏன் இங்கு இக்கட்டத்தில் எடுத்துக் கூறுகின்றோம்? புரட்சிகரப் போராளிகளாகக் கூறிக்கொள்ளும் தமிழீழவிடுதலைப்புலிகள் சென்ற ஆண்டு ஜூலையில் 13 இராணுவ வீரரைக் கொன்றனர். இதற்கெல்லாம் அவர்கள் கொடுத்த விளக்கம் என்ன? தமது அணியில் சாள்ஸ் அந்தனி எனும் வீரனை இராணுவம் கொன்றதற்கு பழிவாங்குவதற்காகவே 13 இராணுவத்தினரை ஜூலையில் சுட்டுக்கொன்றார்கள் எனவும், இன்னொரு சந்தர்ப்பத்தில் மூன்று தமிழ்ப் பெண்களை கற்பழித்ததால் பழிவாங்கினர் எனவும் அவ்வப்போது சமாதானம் சொன்னார்கள். பொறுப்புணர்ச்சியின்றி தனிப்பட்ட முறையில் பழிவாங்கிக் கொள்வதால ஏற்படும் பாரதூர விளைவுகளை பொது மக்கள் ஏன் தாங்கிக் கொள்ள வேண்டும்?

“பழிவாங்கற் தத்துவம்” எதனைக் காட்டுகின்றது?

1. தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெறத் தகுதியற்ற ஒரு சிறுபிள்ளைக் குணம்.

2. போராட்டம் என்பது பழிவாங்கல் அல்ல என்பதை தெரிந்துகொள்ளும் அரசியல் அறிவு இல்லாமை.

3. இதனை ஒரு சமுதாயத்தின் விடுதலைப் பிரச்சனையாகப் பார்க்காமல், குறுகிய சாதிச் சண்டைகள், நிலப் பிரபுத்துவ அடக்கு முறைகள்போல் நோக்குதல்.

4. விடுதலைப் போராட்டங்கள் உலகெங்கினும் இவ்வாறு தனிப்பழிவாங்கல்களாக நடைபெறவே இல்லை யென்பதை இவர்கள் உணராவிடினும், உலக அரசியல் வாதிகள் அறிவர்.

விடுதலைப் போராட்டத்தின் மிக முக்கிய கால கட்டத்தில் வந்துநிற்கும் தமிழ்மக்கள், மெய்யான நிலைமைக்கு முகம் கொடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும். தமிழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் எம்மத்தியில் ஊடுருவி உள்ள தனிநபர் வீரசாகசப் போக்குகளையும் போராட்டச் சித்தாந்தத்திற்கு முரணான கோட்பாடுகளையும் (பழிவாங்குதல் போன்றவை) களைந்தெறிந்து, எம்மிடையே சித்தாந்த ரீதியான ஐக்கியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

“தமிழன்,” “தமிழ்” என்ற சொற்களெல்லாம் மந்திரக் கோல்கள் அல்ல. சகல தமிழரும் உடனே கட்டுப் படுவதற்கு தமிழ்ப் பேசும் மக்களின் உய்வுக்கு வேண்டிய தமிழீழ விடுதலைக்கு நாம் போராடுவதெனில் முதலில் “தமிழ்” “தமிழ்” என்று மட்டும் கூறிக்கொண்டு நம்மை ஏமாற்றுபவர்களை இனங்கண்டு களைந்தெறிதல் வேண்டும்.

“தமிழன்” என்பதாலும் “புரட்சி” “விடுதலை” என்று கூறுவதாலும் நாம் யாவரையும் நம்பிவிடும் காலம் இன்று மலையேறி விட்டது. ஒரு இயக்கத்தினை மக்கள் தரப்படுத்துவதெனில், திறனாய்வதெனில் அவ் இயக்கத்தின் சித்தாந்தந்திற்கும், செயற்திறனுக்கும் உள்ள தொடர்பை நோக்கல் வேண்டும். சித்தாந்தம், செயலும், படிப்பது தேவாரம் - இடிப்பது சிவன் கோவில் என்ற எதிரும் புதிருமான போக்கில் காணப்பட்டால் அவ்வியக்கமானது மக்களுக்கு எதிரானதாகவும், போலியானதாகவும், கையாலாகத் தன்மையுடையதாகவுமே விளங்கும்.

எனவே மக்கள் முதலில் இயக்கங்களைத் திறனாயப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

## உழைக்கும் மக்களுக்காகவே மார்க்சிசம்

நான் இலங்கை அரசினால் தேடப்பட்டபோது, ஆரம்ப காலத்தில் நான் பிறந்து, வளர்ந்து வாழ்ந்த யாழ்ப்பாணத்து படித்த உயர்நிலை மக்களின் சூழ்நிலை எனக்கு பாதுகாப்பு தரவில்லை. கிளிநொச்சி, வவுனியா, போன்ற பிரதேசங்களின் விவசாய மக்களும், மலையக தோட்டத் தொழிலாளரும், மட்டக்களப்பு பிரதேசத்தின் மீனவ சமூகத்தவருமே எனக்கு அடைக்கலம் தந்தார்கள். இக்கால கட்டத்தில் என்னால் இம் மக்களது வறுமையையும், எளிமையையும் நேரடியாக உணரக்கூடியதாக இருந்தது. நாம் அடையப் போராடும் தமிழீழம் இத்தகைய மக்களது அவல வாழ்க்கைக்கு விமோசனம் தரமுடியாவிட்டால் அது எமது உண்மை விடுதலையாக அமையாது என்பதை தெளிவாக இக்காலத்தில் உணர்ந்தேன். இதன் பின்புதான் தமிழீழப் போராட்டத்தை தமிழ்மக்களின் சகல அடக்கு முறைகளுக்கும் எதிரான போராட்டமாக மாற்றியமைக்க வேண்டிய தேவையை உணர்ந்தேன். இதன்பின்பு மார்க்சிச தத்துவத்தை கற்றுக் கொள்ளும் ஆர்வம் எனக்குள் மேலோங்கியது. என்போலவே எனது தோழர்களும் மார்க்சிச சித்தாந்தத்தில் நம்பிக்கை கொள்ளலானார்கள். நாம் மார்க்சிசவாதிகளாக மாறியது இப்படித்தான்.

(அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தோழர் முகுந்தன் பேசியப்பேச்சின் ஒரு பகுதி)

அனுப்பியவர். பி. கோணாமலை, திருச்சி.

www.tamilarangam.net



## மே தினம்...!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அவர்கள் விடுதலை வேட்கையை திசை மாற்றி விடலாம் என்று துடிக்கின்றது சிங்கள இனவாத அரசு. ஆயிரக்கணக்கான தோழர்கள் காவற்படையினரின் தேடுதலில் இருந்து தப்ப, காடுகளிலும் களனிகளிலும் மறைந்து வாழும் பரிதாபம் இன்று தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றது.

இந் நிலையில் எழுச்சிதரும் மே தினக் கூட்டங்களை நடத்துவது முடியாது போனாலும், பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச உறவின் நெருக்கத்தில் இருந்து நாம் என்றும் விலகிப்போகப் போவதில்லை என்று ஆணித்தரமாக இம் மே தினத்தில் உறுதி கூறுகிறோம்.

மிக நெருக்கடியான காலகட்டங்களில்கூட எழுச்சி கொள்ளச் செய்யும் வகையில் போராளிகள் மே தினத்தை சிறப்பாக கொண்டாடியிருக்கிறார்கள் என்பது உலகின் போராட்ட வரலாறு. இந்த வகையில் செக்கோஸ்லவாகியா கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பத்திரிகை ஆசிரியரும் எழுத்தாளருமான தோழர் ஜுலியஸ் பூசிக் ஜேர்மன் பாசிஸ்டுகளினால் 1943 ஏப்ரல் மாதத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் சித்திரவதை செய்யப்பட்டார். சிறைக்கூடங்களில் நடந்த கொடூரமான தாக்குதல்களினால் மரணத்தின் விழிம்பை பல தடவைகள் சந்தித்த ஜுலியஸ் பூசிக் 1943 மே தினத்தையும் சித்திரவதைகளின் மத்தியில் அந்த சிறைக்கூடத்திலேயே கொண்டாடி மகிழ்ந்த வீர வரலாறு ஒவ்வொரு போராளியையும் மனம் கொள்ளவே செய்யும். தோழர் ஜுலியஸ் பூசிக் 1943 செப்டம்பர் மாதம் 8ம் திகதி பெர்லினில் தூக்கிலிடப்பட்டார். சிறையில் இருந்த காலத்தில் அவர் எழுதிய குறிப்புக்கள் அவர் மனைவியினால் தூக்குமேடைக் குறிப்பெனும் நூலாக பின்பு வெளியிடப்பட்டது.

சிறிலங்கா அரசின் சிறைக் கூடங்களில் சித்திரவதைக்குள்ளாகி, மரணத்தை ஒவ்வொரு விநாடியும் எதிர்கொண்டு, இலட்சியத்தில் தளர்ந்து விடாமல் உறுதியுடன் போராடிக் கொண்டிருக்கும் எம் தோழர்களுக்கு ஆதர்சமாக விளங்கும் பொருட்டு ஜுலியஸ் பூசிக்கின் தூக்கு மேடை குறிப்புகளில் மேதினம் பற்றிய கருத்தோட்டங்கள் சிலவற்றை நினைவுபடுத்துகின்றோம்.

ஃ ஃ ஃ

மே முதல்நாள், வானம் வெளுப்பதற்கு முன்.

சிறை மணிக்கூண்டில் மூன்று மணி அடிக்கிறது. முதல் தடவையாக அதன் ஓசை என் காதில் கணீர் கணீர் என்று விழுகிறது. பிரக்ஞை முழுவதும் மீண்டு விட்டது. ஜன்னல் வழியாகப் புதுக் காற்று வீசுகிறது. அது என் விலாப்புறமாகச் செல்கிறது. படுக்கையின் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் வைக்கோல் நுனிகளை அசைக்கிறது. இப்போது தான் எனக்குத் தெரிகிறது வைக்கோல் நுனிகள் என் முதுகை உறுத்துகின்றன என்று. மூச்சுவிடுவது மிகவும் கஷ்டமாகத் தோன்றுகிறது. உடலில் ஒவ்வொரு அணுவும் வலிக்கிறது. ஜன்னலைத் திறந்தவுடன் சட்டென்று பார்ப்பதுபோல், இதுதான் என் முடிவு என்று சட்டென்று புரிந்து கொள்கிறேன் நான் செத்துக் கொண்டிருக்கிறேன்.

சாவே என்னிடம் வர உனக்கு வெகு நேரம் ஆகிவிட்டது. ஒரு காலத்தில் உன்னைச் சந்திப்பதற்குள் பல ஆண்டுகள் கழிந்துவிடும் என்றுதான் நினைத்தேன். சுதந்திர மனிதனாய் வாழலாம்; பற்பல வேலைகளைச் செய்யலாம். மனம் பூரிக்க நேசிக்கலாம்; இன்பம் பொங்கப் பாடலாம்; நானிலமெங்கும் சுற்றித் திரியலாம். குதூகலிக்கலாம்...இப்படியாக எண்ணினேன். அப்போதுதான் நான் பாலப்பருவம் மாறிப் பக்குவமடைந்திருந்தேன். என் உடம்பில் நிரம்பத் தெம்பு இருந்தது. ஆனால் இப்போது அது இல்லை; குன்றிக் குறைந்து வருகிறது.

நான் வாழ்வை நேசித்தேன். அதன் எழிலுக்காகப் போராடப் புறப்பட்டேன். ஜனங்களே! உங்களை மனப்பூர்வமாக நேசித்தேன். நீங்களும் என்னை நேசித்தபோது என் மனம் குளிர்ந்தது. என்னை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டபோது, என் இதயம் வேதனையில் வெந்தது. உங்களில் யாருக்காவது நான் ஏதாவது தீங்கு இழைத்திருந்தால், அருள்கூர்ந்து மன்னித்துவிடுங்கள். என்னால் உற்சாகம் அடைந்தவர்கள், மனம் மகிழ்ந்தவர்கள். வீறு கொண்டவர்கள் யாரேனும் இருந்தால், என்னை மறந்து விடும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். என் பெயரின் அருகே துயரத்தின் சாயல் நெருங்காமல் இருக்கட்டும். இதுதான் என் இறுதி விருப்பம்; நான் விட்டுச் செல்லும் உயில். அப்பா அம்மா! சகோதரிகளே! உங்களுக்கு—என் ஆருயிர் மனைவியே! உனக்கு—இன்னுயிர்த் தோழர்களே! உங்களுக்கு—நான் நேசித்த ஒவ்வொருவருக்கும்—இது தான் என் உயில். துயரத்தின் தூசியைக் கண்ணீர் கரைத்து விடும் என்று நினைத்தால், சிறிதுநேரம் அழுங்கள். ஆனால் வருத்தப்படாதீர்கள். நான் மகிழ்ச்சிக்காக வாழ்ந்தேன்; மகிழ்சிக்காகச் சாகிறேன்; என் சமாதியில் துக்க தேவதையை நிறுத்துவது கொடுமையாகும்.

மே முதல் நாள்! இந்த நன்னாளில் பொழுது புலர்வதற்குள் நாங்கள் எழுவோம். கொடிகளைத் தயார் செய்வோம். இந்த நேரத்தில் மாஸ்கோவில், மே தின அணிவகுப்பில் செல்லும் பொருட்டு முதல் வரிசையினர் ஆயத்தமாகி, தத்தம் இடத்தில் தயாராகப் போய் நிற்பர். இன்றைக்கு இந்நேரத்தில் மனித சுதந்திரத்தைக் காப்பதற்காக நடைபெறும் மகத்தான இறுதிப் போரில் வட்சோபலட்சம் மக்கள் சமர் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான வீரர்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள் நான் அவர்களில் ஒருவன். அவர்களில் ஒருவனாகவே என்றுமிருப்பேன். சுதந்திரத்திற்கான இறுதிப் போரில் ஒரு வீரனாயிருப்பது எவ்வளவு மகத்தான பாக்கியம்!

**"மனிதர்களே வரலாற்றினை உருவாக்குகிறார்கள். ஆனால் மனிதர்கள் தாமே தேர்ந்தெடுத்த சூழ்நிலைகளில் இதைச் சாதிப்பது சாத்தியமில்லை ஏற்கனவே வரலாறு கையளித்த நிலைமைகளுக்குள்ளேயே அரசியல் போக்குகள் இயங்குகின்றன."**

— தோழர் ஜெயாவின் நினைவாஞ்சலிக் கூட்டம் 01-05-84ல் நடைபெற்றபோது தோழர் வசந்தன்.

ஆனால் சாவது சௌந்தர்யமானதல்ல. எனக்கு மூச்சுத் திணறுகிறது. இருமல் பக்கத்திலுள்ளவர்களை எழுப்பிவிடும் போலிருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் குடித்தால், ஒருவேளை...ஆனால் தகரக் குவளையில் இருந்த தண்ணீர் முழுவதும் தீர்ந்துவிட்டது. அதோ அந்த மூலையில், கேவலம் ஆறு அடி தூரத்தில்...முகம் கழுவும் இடத்தில் தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. ஆனால் அங்கு போய்ச் சேர என் உடம்பில் வலுவிருக்கிறதா?

ஓசைப்படாமல் குப்புறப்படுத்தவாறே நகர்கிறேன் மிக மெதுவாக...சாவின் பெருமை மற்றவர்களை எழுப்பாமல் இருப்பதில்தான் இருக்கிறது என்ற எண்ணமோ என்னவோ? கடைசியாக அங்கு போய்ச் சேர்கிறேன். தொட்டியிலிருந்து ஆர்வத்துடன் தண்ணீரைக் குடிக்கிறேன்.

போகவும், குடிக்கவும், திரும்பி ஊர்ந்து வரவும் எவ்வளவு நாழியாயிற்று என்பது எனக்குத் தெரியாது. மீண்டும் நிகா தப்புகிறது. கை நாடியைத் தடவிப் பார்க்கிறேன். ஒன்றும் புரியவில்லை. இருதயம் திடீரென்று தொண்டைப் பக்கம் பாய்கிறது. உடனேயே பழைய

(தொடர்ச்சி 4- இஇல்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய பாதைகளை வரவேற்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தம்மோடு முரண்படும் தமிழீழ போராளிகளை ஆயுதமுனையில் வஞ்சம் தீர்ப்பதே வழமையான அரசியலாக இருந்து வந்தது. இன்று அதில் ஒரு படி முன்னேற்றமாக 'விடுதலைப் புலிகள்' எனும் பத்திரிகையை வெளியிட்டு நாகரிக அரசியலுக்குள் காலடி வைத்ததை 'புதிய பாதை' பெருமனதுடன் வாழ்த்தி வரவேற்கிறது. ...எமக்கு எதிராக எழுப்பிவிடப்பட்ட அபாண்டமான பொய்கள் மக்கள் மத்தியில் குழப்பத்தை கிளப்பியது......நாம் எம் மக்களுக்குப் பதில் அளித்தாக வேண்டும். உண்மையை எடுத்துக் கூற வேண்டும்...'' என்று புலிகளின் குரலில் உறுமியவர்கள், அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எந்தப் பகுதியிலும்பதிலிறுக்க தவறியது கண்டு ஏமாற்றமடைந்த மக்களை நாம் அறிவோம்,

உதாரணத்திற்கு இணைவு முயற்சியில் பிற்போக்கு வாதிகளின் ஊடுருவல் என்ற எமது பிரசுரத்திற்கு பதில் கூற முன்வந்தவர்கள் முக்கியமான மூன்று கேள்விகளை மறந்துவிட்டார்கள்.

1) 'தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரை தமது தாபனம் மாத்திரமே பாவிக்க வேண்டும் என்ற உரிமையை நாம் விட்டுக் கொடுத்தால் இணைவு முயற்சியில் கலந்து கொள்வோம் என்றவர்கள் அப்படியான சம்மதத்தை எம்மிடமிருந்து பெற்ற பின்பு இணைவு முயற்சிக்கு ஒத்துழையாமல் பின் வாங்கியது.

2) தமிழீழ விடுதலை இராணுவத் தலைவர் ஓபரோய் தேவனை சுட்டுக் கொன்றதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் வளர்ச்சியடைந்து வரும் சிறு தாபனங்களை அச்சுறுத்தி இணைவு முயற்சியில் இருந்து ஒதுங்கச் செய்தமை.

3) பல்வேறு இயக்கங்களையும் ஐக்கியப்படுத்தி ஒரே அமைப்பாக்குவதென்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் அர்த்தத்தில் ஏனைய இயக்கங்களை அழித்து அதன் தலைவர்களைக் கொன்றொழித்து தம்மை மாத்திரமே ஒரே இயக்கமாகப் பிரகடனப்படுத்தும் கயமை. தோழர் சுந்தரம், ஓபரோய் தேவன் வரிசையில் பனாகொடை மகேஸ்வரனுக்கு துரோகி முத்திரையிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் முத்திரை குத்தும் போக்கு.

இவற்றிற்கெல்லாம் தமிழ்மக்கள் இவர்களிடம் பதிலை எதிர்பார்க்கவில்லை. பாதையை திருத்திக் கொண்டால் போதும்.

**'உலக சமாதான சபையின் நடுநிலை நாடுகளின் பங்களிப்பு' என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கம் புதுடெல்லியில் 1984 ஏப்ரல் 5-8 திகதிகளில் நடைபெற்றது. இதில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் உமாமகேஸ்வரன் (முகுந்தன்) தமிழீழத்திலிருந்து கலந்துகொண்டார். அங்கு பங்கு பற்றிய பிரதிநிதிகளிடம் தோழர் முகுந்தன் முன்வைத்த கருத்துக்களில் சில...**

தமிழீழத்தில் வாழும் மக்களின் நீதிக்கும் சமாதானத்திற்குமான போராட்டத்தை எமது அமைப்பு முன்னெடுத்துச் செல்கிறது. இந்தப் போராட்டம் உலகசமாதான சபையில் பங்குபற்றும் அங்கத்தவர்களுக்கு பரிட்சயமானதும், மகிழ்ச்சி தருவதுமானதும் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை. மானுட வளர்ச்சி இத்தகைய போராட்டங்களுக்கூடாகவே நிலைநிறுத்தப்பட்டு வந்திருக்கின்றது, அத்தகைய போராட்டத்தில் பங்காளிகளாகி உலக மானுட வளர்ச்சிக்கு உழைக்கின்றோம் என்பதில் பெருமைப்படுகின்றோம். . நடுநிலை நாடுகளின் ஊசலாட்டத்தின் அடிப்படை என்ன? அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிந்து போவதா அல்லது எதிர்த்து ஐக்கியப்பட்டுப் போராடி வெல்வதா என்பதே நடுநிலைமை நாடுகளிடையே ஏற்படும் பிளவுக்கு காரணம் .இந்த வகையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடும் இந்திரா காந்தியின் கரத்தைப் பலப்படுத்தவேண்டியது நடுநிலை நாடுகளின் இன்றைய கடமையாகும்.

